# திருக்குறள்

**17. செல்வத்துள் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வம்**
**செல்வத்துள் ளெல்லாந் தலை.**

பொருள் :

செல்வங்களுள் ஒன்றாகப் போற்றப்படும் செவியால் அறியப்படும் கேள்வி ஞானம் எல்லாச் செல்வத்திலும் முதன்மையானது.

**18. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு.**

பொருள் :

எந்த செய்தியையும் எவரெவர் வாய் மூலமாகக் கேட்டாலும் அந்த செய்தியின் உண்மையை அறிவது அறிவு.

**19. முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை**
**இன்மை புகுத்தி விடும்.**

பொருள் :

முயற்சியும் சுறுசுறுப்பும் ஒருவனுக்குச் செல்வத்தைத் தரும். முயற்சியின்றிச் சோம்பி இருந்தால் அது வறுமையைத் தான் கொடுக்கும்.

**20. முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து**
**அகநக நட்பது நட்பு.**

பொருள் :

முகம் மலரும்படிப் பேசுவது மட்டும் நட்பாகாது மனத்தால் மகிழும் படி நட்புக் கொள்வதே உயர்ந்த நட்பு.